பொருளியல்

தேசிய கணக்கீடு



e-தக்சலாவ கல்விக்கூடம்™
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி 5

தேர்ச்சி மட்டம் 5.3

தேசிய கணக்கீடு

ஒரு நாடு குறித்த ஒரு வருடத்தில் காரணிச்சேவைகளைப் பயன்படுத்தி மேற்கொண்ட பொருளாதார நடவடிக்கைகளின் பெறுமதியை பண ரீதியாக மதிப்பீடு செய்தல் தேசிய கணக்கீடு ஆகும். 2008ம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் தேசிய கணக்கு முறைமைக்கு அமைவாக 2015ம் ஆண்டு முதல் உலக நாடுகள் தமது தேசிய கணக்கினைத் தயாரிக்கின்றன. இலங்கையில் தொகை மதிப்பீட்டு புள்ளி விபரத் திணைக்களம் தேசிய கணிப்பீட்டை மேற்கொள்கின்றது.



உற்பத்தி வழியில் தேசிய கணக்கீடு

இரட்டை எண்ணல் பிரச்சினை/ பல்கணிப்பீட்டுப் பிரச்சினை

உற்பத்திக் கணிப்பீட்டு முறையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியை மதிப்பீடு செய்யும் போது ஒரே பொருளின் பெறுமதி பல தடவைகள் கூட்டப்படுவதனால் உற்பத்தியின் பெறுமதி மிகைக் கணிப்பீட்டிற்கு உட்படும். இவ்வாறு ஒரே பொருளின் பெறுமதி பல்வேறு தடவைகள் உற்பத்தியில் சேர்க்கப்படுதல் பல்கணிப்பீட்டுப் பிரச்சினை எனப்படும்.

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இரட்டை எண்ணல் பிரச்சினையினைத் தீர்த்தல்

பின்வரும் இரண்டு முறைகளைப் பயன்படுத்தி இரட்டை எண்ணல் பிரச்சினை தீர்க்கப்படுகின்றது.

1. இறுதி உற்பத்தி முறை
2. கூட்டப்பட்ட பெறுமதி முறை

இறுதி உற்பத்தி முறை

இம்முறையின்படி முடிவுப் பொருட்கள் சேவைகளின் பெறுமதியே தேசிய கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்படும். மூலப்பொருட்கள், இடைநிலைப் பொருட்களின் பெறுமதி சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. இம்முறை நடைமுறைப் பிரயோகமற்ற முறையாகும். ஏனெனில் குறித்த ஒரு பொருள் முடிவுப்பொருளா இடைநிலைப்பொருளா என்பதை இனங்காண்பது சிக்கலானதாகும்.

உதாரணம் :- சீனி இறுதி நுகர்வுப்பொருளாகக் காணப்பட்டாலும் இனிப்புப் பண்ட உற்பத்திக்கு அது இடைநிலைப் பொருளாக அமையலாம்.

கூட்டிய பெறுமதி முறை:-

உற்பத்தி செயன்முறையில் புதிதாக உருவாக்கப்படும் பெறுமதியை கூட்டிய பெறுமதி என்பர். ஒரு உற்பத்தி நடவடிக்கைகளில் மொத்த வெளியீட்டுப் பெறுமதியில் இருந்து அவ்வெளியீட்டிற்காக பயன்படுத்திய இடைநிலை உள்ளீடுகளைக் கழிக்க வரும் பெறுமதியை கூட்டிய பெறுமதி என்பர்.

கூட்டிய பெறுமதி = மொத்த வெளியீட்டுப் பெறுமதி- இடைநிலை உள்ளீடுகளின் பெறுமதி

Gross Value Added (GVA)= Gross Value of Output (GVO) - Intermediate Consumption (IC)

⇒ உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சேவைகளின் பணப்பெறுமதியை/ சந்தைப் பெறுமதியை வெளியீட்டின் மொத்த பெறுமதி (Gross Value of Output— GVO) என அழைப்பர்.

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

உள்ளீடுகள்

முதனிலை உள்ளீடுகள்

(உற்பத்தி செயற்பாட்டில் பயன்படுத்தப்படும் உற்பத்தி காரணிகளை (நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி) முதனிலை உள்ளீடுகள் என்பர்)

இடைநிலை உள்ளீடு

(உற்பத்தி நடவடிக்கைக்காக உற்பத்தி நிறுவனத்திற்கு வெளியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் சேவைகள் இடைநிலை உள்ளீடுகளாகும்)

உதாரணம் :- மூலப்பொருட்கள், வலு

உற்பத்தி கூட்டப்பட்ட பெறுமதி பின்வரும் இரண்டு முறைகளில் கணிப்பிடப்படுகின்றது



தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

1. உற்பத்தி மூலம்

கூட்டப்பட்ட பெறுமதி (GVA) = மொத்த வெளீயீட்டு பெறுமதி (GVO) - இடைநிலை நுகர்வு (IC)

2. வருமான மூலம்

உற்பத்திக்கு பங்களிப்புச் செய்த காரணிச் சேவைகளின் வருமானத்தையும் பெறுமானத் தேய்வையும் கூட்டுவதன் மூலம் கூட்டப்பட்ட பெறுமதி கணிப்பிடப்படும்

கூட்டப்பட்ட பெறுமதி (GVA) = வாடகை வட்டி + கூலியும் சம்பளமும் + இலாபம்+ பெறுமானத்தேய்வு (நிலையான மூலதன நுகர்வு)

உற்பத்தி அடிப்படை			வருமான அடிப்படை		
1. உற்பத்தியின் பெறுமதி		9500	உற்பத்தி காரணிகளுக்கான கொடுப்பனவு		
2. கழி			வாடகை	2000	
மூலப்பொருட்கள்	3000		சம்பளம்	1000	
சேவைகளின் செலவுகள்	1500		வட்டி	800	
			இலாபம்	500	
மொத்தம் (கழி)		4500			4300
			காரணியல்லா கொடுப்பனவு பெறுமானத் தேய்வு	700	700
மொத்தக் கூட்டப்பட்ட பெறுமதி		5000	மொத்த கூட்டப்பட்ட பெறுமதி		5000

தொகுப்பு : திரு.இ.ஞானேஸ்வரன் ஆசிரியர் - பொருளியல், (யா/அருணோதயாக் கல்லூரி, அளவெட்டி)

கணினி வடிவமைப்பு : திரு.க.குகதாசன் ஆசிரியர் - த.தொ.தொ (கிளி/புனித பற்றிமா றோ.க.த.க பாடசாலை, உருத்திரபுரம்)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk